II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 143 of 2023**

Deposition of witness for the 2nd Respondent / RW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 20.01.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Arunkumar | Caste | : | |
| Father's / Husband's Name | : | | Calling | : | |
| Age | : | | Religion | : | |
| Village | : | | Taluk | : | |

முதல் விசாரணை =

நான் 2ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அனுமதி கடிதம் எ.ம.சா.ஆ.1. இந்த வழக்கு விபத்து 05.09.2023 அன்று நடந்துள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் மகன் பிரசாந்த் சார்லஸ் என்பவர் தான் விபத்தின் சமயம் இருசக்கர வாகனம் TN 12, AZ5297 யை ஓட்டியுள்ளார். அவர் 14.11.2023 அன்று தான் பழகுனர் உரிமம் பெற்றுள்ளார். அந்த பழகுனர் உரிமத்தின் ஆன்லைன் நகல் எ.ம.சா.ஆ.2. அவர் 09.01.2024 அன்று தான் ஓட்டுனர் உரிமம் எடுத்துள்ளார். அந்த ஓட்டுனர் உரிமத்தின் ஆன்லைன் நகல் எ.ம.சா.ஆ.3. இருசக்கர வாகனம் TN 12, AZ5297 ஆனது 12.10.2023 அன்று ஆய்விற்காக எங்கள் அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டது. அந்த ஆய்வறிக்கையின் ஆன்லைன் நகல் எ.ம.சா.ஆ.4 ஆகும். எ.ம.சா.ஆ.4ல் இருசக்கர வாகன ஓட்டுனரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ஓட்டுனர் உரிமம் இன்றி இருசக்கர வாகனத்தை ஓட்டியுள்ளதால் ரூ.5,000/- அபராதம் செலுத்தியதற்கான ஆன்லைன் ரசீதின் நகல்

எ.ம.சா.ஆ.5 ஆகும்.

மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை–

எ.ம.சா.ஆ.4 ல் ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இருசக்கரவாகனத்தின் உரிமையாளர் விமலா சார்லஸ் ஆவார். அவர் தான் எங்கள் அலுவலகத்தில் வாகனத்தை தணிக்கைக்காக ஒப்படைத்தார். அபராதத்தை விமலா தான் செலுத்தியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ஓட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்யாததால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பிரசாந்த சார்லஸ்சிற்கு பழகுனர் உரிமம் 27.04.2023 முதல் 26.10.2023 வரை எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது ம.சா.ஆ.19 ஆகும். உரிமையாளர் கொடுத்த தகவலின் பேரில் நாங்கள் தவறாக அபராதம் விதித்துள்ளோம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9 இறுதி அறிக்கையிலும் ஓட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் உரிய பழகுனர் உரிமத்துடன் தான் இருசக்கர வாகனம் இயக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.